தற்போது பாண்டியனின் உடல் அரசு மருத்துவமனையில் பரிசோதனைக்காக உள்ளது. பிரேதப் பரிசோதனைக்குப்பின் உறவினரிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையைத் தயாராக வைத்துள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் காலையிலேயே தொலைபேசிவாயிலாகத் தொடர்புகொண்டு பேசப்பட்டிருக்கிறது. அங்கே எந்தவிதமான சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையும் இப்பொழுது இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிறார். இந்தச் சம்பவம் குறித்து காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து, முறையான நடவடிக்கையை எடுத்து வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் இவ்வாறு தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து மத்திய அரசிடம் நாம் தொடர்ந்து பல முறை கோரிக்கை வைத்து, அவர்களும் இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கூறியும், இப்படிப்பட்ட சம்பவங்கள் ஆங்காங்கே நடந்து வருகின்றன. எனவே, இந்தச் சம்பவம் குறித்து மத்திய அரசுக்கு இன்றைய தினமே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக இதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தந்தி ஒன்றும் அனுப்பியிருக்கிறார் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

முற்பகல் *9—55*

(ஆ) வேலூர், புதிய பேருந்து நிலையத்திற்கு நிலம் கையகப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No second issue. திரு. கு. பாண்டுரங்கன். *(குறுக்கீடு)*

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வேலூர் புதிய பேருந்து நிலையத்தின் எதிர்கால விரிவாக்கத் தேவைக்காகக் கையகப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த இடம், வேறு யாருக்கோ விற்கப்படுகிறதென வேலூர் மாவட்ட மக்களிடையே பெருத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதென்பதை நான் கனிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். 8.79 ஏக்கர் பரப்பளவில் தற்போது இயங்கிவரும் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான 9.75 ஏக்கர் நிலத்தை எதிர்காலத் தேவையைக் கருதி கையகப்படுத்த

2011 ஜனவரி 13] [திரு. கு. பாண்டுரங்கன்]

மாநகர மாமன்றமும் ஏகமானதாகத் தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பிறகு, உயர் நீதிமன்றமும் சாதகமான தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், தற்போது மாவட்ட நிருவாகமும், மாநகரத்தினுடைய ஆணையரும் பாதகமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள் என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் மாவட்டத்தினுடைய மக்களும் இந்தச் செயல்பாடுகளை ஐயத்தோடு பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். தற்போது மேற்காணும் நிலத்தில் அவசர அவசரமாக லாரிகள்மூலம் மண்ணைக் கொட்டி நிரப்புகிற வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில், நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், மாநகராட்சியினுடைய நிதியிலிருந்தோ அல்லது அரசு நிதி உதவி மூலமாகவோ மேற்காணும் நிலத்தைப் போர்க்கால அடிப்படையில் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, மேற்காணும் நிலம் கை நழுவிப் போனால், வருங்காலத்தில் பேருந்து நிலையத்தினை விரிவாக்குவதற்கு, வேறு வழியே இல்லையென்பதையும் நான் இந்த நேரத்தில் தொலைநோக்குப் பார்வையோடு, பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே ஒரு பாடல் எனக்கு நினைவுக்கு வருகின்றது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படத்திலே பாடிய பாட்டு ஒன்று நினைவுக்கு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டுப் பாட வேண்டாம். விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. கு. பாண்டுரங்கன்: ** என்ற அளவிற்கு இன்றைக்கு நிருவாகம் இருந்துகொண்டிருக்கின்றது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, வேலூர் மாவட்ட மக்களுடைய வசதிக்காக, பேருந்து நிலையத்தின் விரிவாக்கத்திற்கு, தனியாருக்குச் சொந்தமான மேற்காணும் நிலத்தினைக் கையகப்படுத்துவதற்குப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அரசிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பாண்டுரங்கன், நீங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசும்பொழுது, ** மியான்மர், பங்களாதேசம் என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) கவன ஈர்ப்பாக இப்போது நான் எடுக்கவில்லை, தகவல் கோரலாகத்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் பேசுகின்றபோது, ** என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். எனவே அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) வேறு subject இருக்கிறதா? No, no. திரு. தி. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடு)

3. கேரளாவில் தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளில் பொங்கல் திருநாளுக்கு அரசு விடுமுறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு, கேரள அரசிற்கு, அங்கு வாழக்கூடிய தமிழ் மக்களுக்குப் பொங்கல் விடுமுறை விட வேண்டுமென்கிற வேண்டுகோளை விடுத்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழுவும் இந்த வேண்டுகோளை வைத்திருந்தது. இதனை ஏற்ற கேரள அரசு, அங்கிருக்கக்கூடிய தமிழ் மக்களுக்குப் பொங்கல் விடுமுறையை விட்டிருக்கிற மகிழ்ச்சியான செய்தியை இங்கே பரிமாறிக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.